# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# பதவி வெற்றிடங்கள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் உள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

**01. சபைச் செயலாளர் (JM 1-1) 01 பதவி வெற்றிடம்**
**(BOARD SECRETARY)**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டம் அத்துடன் ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.
2. பதவிக்கு இயைபான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1 மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமைகளை கொண்டிருத்தல்.
2. பதவிக்குரித்தான விடயத் துறையில் இணை உத்தியோகத்தர் வகுதியில் (MA 3) தர பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகர சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
3. பதவிக்குரித்தான விடயத் துறையில் 'முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத' (MA 1) II தர பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகர சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**
22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:**
JM 1-1- 01/2025: ரூபா [72,650-10 x 1,360 — 18 x 2,040 = 122,970/-] 2027-01-01ஆம் திகதியில்
அடிப்படைச் சம்பளம்: 72,650.00

**02. உளசமூக உத்தியோகத்தர் (JM 1-1) - (01 பதவி வெற்றிடம்)**
**PSYCHOSOCIAL OFFICER**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் உளவியல் / சமூகவியலில் இளமாணிப் பட்டம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து பெற்ற உளவளத்துனை (Counseling) டிப்ளோமா அத்துடன் கணனி அறிவு மற்றும் EXCEL, SPSS ஆகியவற்றில் பணிபுரியும் திறன் இருப்பது மேலதிக தகுதியாகக் கருதப்படும். [(உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)]

1 மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படும் தகைமைகளைக் கொண்டிருத்தல்.
2. தவிக்குரித்தான விடயத் துறையில் 'முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத' (MA 1) II தரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகர சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**
22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:**
JM 1-1- 01/2025: ரூபா [72,650-10 x 1,360 — 18 x 2,040 = 122,970/-] 2027-01-01ஆம் திகதியில்
அடிப்படைச் சம்பளம்: 72,650.00

**03. விசாரணை உதவியாளர் (MA 3) – (2 பதவி வெற்றிடங்கள்)**
**INVESTIGATION ASSISTANT**

**தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குற்றவியல் தொடர்பான இளமாணிப் பட்டம்

**வயது:**
23 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:**
MA 3 - 01/2025: ரூபா [ 53,940-10 x 800- 11 x 1,190 -10x1320 -5x1350 = 94980/-] 2027-01-01ஆம் திகதியில்
அடிப்படைச் சம்பளம்: 53,940.00

**4. நிகழ்ச்சி உதவியாளர் (MA 3) – (2 பதவி வெற்றிடங்கள்)**
**PROGRAMME ASSISTANT**

**தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ சமூக விஞ்ஞானம் / சுகாதார மேம்பாடு அல்லது ஏனைய தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர்களுடன் தொடர்புடைய ஒரு வருட கால டிப்ளோமா மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

**வயது:**
23 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:**
MA 3 - 01/2025: ரூபா [ 53,940-10 x 800- 11 x 1,190 -10x1320 -5x1350 = 94980/-] 2027-01-01ஆம் திகதியில்
அடிப்படைச் சம்பளம்: 53,940.00

**5. இணையதள கண்காணிப்பு உதவியாளர் (MA 3) – (1 பதவி வெற்றிடம்)**
**CYBER WATCH ASSISTANT**

**தகைமைகள் (கீழ் குறிப்பிட்ட 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான இளமாணிப் பட்டத்துடன் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா காணப்படல்

**வயது:**
23 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:**
MA 3 - 01/2025: ரூபா [ 53,940-10 x 800- 11 x 1,190 -10x1320 -5x1350 = 94980/-] 2027-01-01ஆம் திகதியில்
அடிப்படைச் சம்பளம்: 53,940.00

**6. பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் (MA 3) – (25 பதவி வெற்றிடங்கள்)**
**DIVISIONAL CHILD PROTECTION OFFICER**

**தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல் அல்லது வேறு ஏதாவது தொடர்புடைய துறையில் பட்டம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உளவாத்துனைகள் தொடர்பான ஒரு வருடகால டிப்ளோமா மேலதிக தகமையாக கருதப்படும்.

**வயது:**
23 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:**
MA 3 - 01/2025: ரூபா [ 53,940-10 x 800- 11 x 1,190 -10x1320 -5x1350 = 94980/-] 2027-01-01ஆம் திகதியில்
அடிப்படைச் சம்பளம்: 53,940.00

**7. திட்டமிடல் உதவியாளர் (MA 3) – (01 பதவி வெற்றிடம்)**
**PLANNING ASSISTANT**

**தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / சமூகவியல் அல்லது வேறு ஏதாவது தொடர்புடைய துறையில் இளமாணி பட்டம்.

**வயது:**
23 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:**
MA 3 - 01/2025: ரூபா [53,940-10 x 800- 11 x 1,190 -10x1320 -5x1350 = 94980/-] 2027-01-01ஆம் திகதியில்
அடிப்படைச் சம்பளம்: 53,940.00

**8. சாரதி (PL 3) – 02 பதவி வெற்றிடங்கள்**
**DRIVER**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
க.பொ.த. (சா.த) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு அமர்வுகளில் இரண்டு (2) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**
மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வாகனம் செலுத்தும் உரிமத்தைப் பெற்றிருத்தல் (மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் செலுத்தும் செல்லுபடியாகும் சாரதி உரிமம்) மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வாகனம் செலுத்தும் உரிமத்தைப் பெற்றிருத்தல் (மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் செலுத்தும் செல்லுபடியாகும் சாரதி உரிமம்) மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவம்.

**மற்றும்**
தேர்ச்சியற்ற வகுதி (PL1) பகுதியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**
18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:**
PL 3 01/2025: ரூபா [ 43,280 – 10 x 490 – 10 x 540 – 10 x 590 – 12 x 630 = 67,040/-] 2027-01-01ஆம் திகதியில்
அடிப்படைச் சம்பளம்: 43,280

**மேற்கூறிய அனைத்துப் பதவிகளுக்கும்**
அடிப்படைச் சம்பளத்தைத்திற்குப் புறம்பாக அரசு அங்கீகரித்த வாழ்க்கைச் செலவுப் படி வழங்கப்படும். ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% பங்களிப்பை அதிகார சபை செலுத்தும்.

**மேற்கண்ட அனைத்துப் பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு நடைமுறை (சாரதி பதவி விடுத்து)**
நியமன அதிகார அமைப்பால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் மூலம், எழுத்து மூலத் தேர்வு மற்றும் /அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**பொது நிபந்தனைகள்**

சகல அபேட்சகர்களும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையுடையவராகவும் நாட்டின் எப்பாகத்திலும் தமது கடமைக்குரித்தான சேவைகளைச் செவ்வனே செய்வதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இந்த பதவிகளுக்கான மாதிரி விண்ணப்பப் படிவங்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் (www.childprotection.gov.lk) உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2026 ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சகல விண்ணப்பப் படிவங்களுடனும் பிறப்பத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை அல்லது வெளிநாட்டுக் கடவுச் சீட்டு மற்றும் கல்வி, தொழில்சார் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோர்களின் பெயர் மற்றும் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் சகிதம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பதாரரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் மற்றும் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தைக் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

அரச துறை / கூட்டுத்தாபனம் / நியதிகள் சபைகளில் தற்போது பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாகவே அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணக்கமில்லாத முழுமையற்ற மற்றும் தெளிவற்ற விண்ணப்பங்களும், மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். இந்தப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வகையிலாவது ஆதரவைப் பெறுவது தகுதியீனமாகக் கருதப்படும். குறும் பட்டியலிடப்பட்ட அபேட்சகர்கள் மட்டுமே எழுத்து மூல போட்டிப் பரீட்சைக்கு அல்லது / மற்றும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,**
**இல. 330, தலவத்துகொட வீதி,**
**மாதிவல, ஸ்ரீ ஜயவர்தனபுர.**

**தொலைபேசி: 0112778911- 14**
**இணையதளம்: www.childprotection.gov.lk**